# SOCIAL ORGANIZATIONS NETWORKING FOR DEVELOPMENT (SOND)

# Annual report -2020

## Vision

**Creating a better society**

## Mission

**Supporting and Organizing different people organizations and group to strengthen the civil society and people to make them to function as a model to follow in order to create a better society**

# வருடாந்த அறிக்கை

# 2020

## அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு

## (SOND)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனம் கடந்த 22 வருடங்களாக செயற்பட்டு வருகின்றது. எமது நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் பின்வரும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1. மனித வியாபாரத்திற்கு எதிரான செயற்பாடுகளை வலுவூட்டுதல் செயற்திட்டம் (Strengthening Counter Trafficking Efforts in Sri Lanka-SCOUT project)
2. மாற்றத்திற்கான பாதை செயற்திட்டம் (PATH to Change project)
3. அனர்த்த தணிப்பு செயற்திட்டம் (Disaster Risk Reduction project)
4. முரண்பாட்டின் நிலைமாற்றத்திற்காக இடம்பெற்றுவரும் பல்மட்டங்களிலான பங்காளிகளின்நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தல் (Consolidating Ongoing Multi-level Partnership Actions for Conflicts Transformation -COMPACT project)
5. தகவல் வளநிலையம் (Information Centre)
6. விசேட செயற்பாடுகள் (Special Activities)

### மனித வியாபாரத்திற்கு எதிரான செயற்பாடுகளை வலுவூட்டுதல் செயற்திட்டம் (Strengthening Counter Trafficking Efforts in Sri Lanka- SCOUT)

US Aid நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் IOM நிறுவனத்தினூடாக மனித வியாபாரத்திற்கு எதிரான செயற்பாடுகளை வலுவூட்டுதல் செயற்திட்டம் எமது நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தின் தெல்லிப்பளை, கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய 6 பிரதேச செயலகர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

- ❖ மாவட்ட செயலகத்தில் ஒரு திட்ட அறிமுகக்கூட்டமும், மேற்குறிப்பிடப்பட்ட 6 பிரதேச செயலகர் பிரிவுகளில் 6 திட்ட அறிமுகக்கூட்டங்களும் நடாத்தப்பட்டன. இக்கூட்டங்களின் மூலம் திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

- ❖ அரச உத்தியோகத்தர்களுக்கான 6 பயிற்சி நெறிகளை மேற்குறிப்பிட்ட 6 பிரதேச செயலகர் பிரிவுகளில் நடாத்தியபோது 198 அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதுடன் மனித வியாபாரம் தொடர்பான அறிவினைப் பெற்றுள்ளனர்.

- ❖ கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான 6 பயிற்சி நெறிகளை மேற்குறிப்பிட்ட 6 பிரதேச செயலகர் பிரிவுகளில் நடாத்தியபோது 176 கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன் மனித வியாபாரம் தொடர்பான அறிவினைப் பெற்றுள்ளனர்.

- ❖ இளைஞர்களுக்கான 3 பயிற்சி நெறிகளை சாவகச்சேரி, நல்லூர், தெல்லிப்பளை ஆகிய பிரதேச செயலகர் பிரிவுகளில் நடாத்தியபோது 63 இளைஞர்கள் கலந்துகொண்டதுடன்

மனித வியாபாரம் தொடர்பான அறிவினைப் பெற்றுள்ளனர். கோவிட்-19 காரணமாக ஏனைய பிரதேசங்களில் இப்பயிற்சிநெறியினை நடாத்த முடியவில்லை.

- ❖ மனித விற்பனை தொடர்பான கலந்துரையாடல்கள் 5 நடைபெற்றன. இக்கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட 6 பிரதேச செயலகர் பிரிவுகளை சேர்ந்த அரச அதிகாரிகள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிகளும் 156 பேர் கலந்துகொண்டதுடன் மனித விற்பனை தொடர்பானபிரச்சனைகளும் ஆராயப்பட்டன.

- ❖ மனித விற்பனைக்கு எதிரான தினம் கொண்டாடப்பட்ட போது அரச அதிகாரிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிகள் மற்றும் இளைஞர்கள் 222 பேர் கலந்துகொண்டனர்.

- ❖ மனித விற்பனை தொடர்பான விழிப்புணர்வு பலகைகள்(Bill board) 40’x 20’ ஒரு விழிப்புணர்வு பலகையும், 30’x 20’ ஒரு விழிப்புணர்வு பலகையும், 20’x 10’ இல் 4 விழிப்புணர்வு பலகைகளும், 8’x 4’ இல் 12 விழிப்புணர்வு பலகைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ மனித விற்பனை தொடர்பான 150 விழிப்புணர்வு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ மனித விற்பனை தொடர்பான விழிப்புணர்வு நாடகங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- ❖ மனித விற்பனை தொடர்பான விழிப்புணர்வு செய்திகள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

## மாற்றத்திற்கான பாதை செயற்திட்டம் (PATH to Change project)

யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் மாற்றத்திற்கான பாதை செயற்திட்டம் எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 44 பாடசாலைகளிலும் 30 சிறுவர் கழகங்களிலும் 20 சிறுவர் இல்லங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்

- ❖ இரு மாவட்டங்களிலும் திட்ட அறிமுக கூட்டம் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

- ❖ 3 கூட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் 2 கூட்டங்கள் கிளிநொச்சியிலும் உள்ளடங்கலாக 5 gatekeepers meeting நடைபெற்றுள்ளது.

- ❖ 5 பகுதியினருக்கான 4 நாள் கொண்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிநெறி நடைபெற்றுள்ளது.

- ❖ இந்த பயிற்சியை முடித்துக்கொண்ட ஆசிரியர்களும் தன்னார்வளர்களும் பாடசாலைகளிலும் சிறுவர் இல்லங்களிலும் சிறுவர் கழகங்களிலும் மாணவர்களுக்கான பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.
- ❖ இத் திட்டம் சம்மந்தமான விழிப்புணர்வு செயலமர்வுகள் 6 பயிற்சிகள் ஆசிரியர்களுக்கானதும் 3 பயிற்சிகள் பெற்றோர்களுக்கானதும் 1 பயிற்சி நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கானதுமாக மொத்தமாக 10 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

- ❖ இரு மாவட்டங்களிலும் இடைக்கால திட்ட மீளாய்வு கூட்டம் நடைபெற்று திட்டத்தின் போக்கு நிலைகள் தொடர்பாக கல்வி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பின்னூட்டல் செய்யப்பட்டது.

- ❖ இறுதி திட்ட மீளாய்வு கூட்டம் மேலதிக கல்வி பணிப்பாளர்-வட மாகாணம் தலைமையில் நடைபெற்றது.

## அனர்த்த தணிப்பு செயற்திட்டம் (Disaster Risk Reduction project)

அனர்த்த பாதிப்புக்களில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடன் அனர்த்த தணிப்பு செயற்திட்டம் யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டது.

இச்செயற்றிட்டமானது யாழ் மாவட்டத்தின் மருதங்கேணி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவுகளில் 9 கிராம சேவையாளர் பிரிவிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டிசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளில் 9 கிராம சேவையாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

- ❖ அரச அதிகாரிகள் மற்றும் சமூகத்தலைவர்கள் உட்பட 264 பேரிடம் அனர்த்த தணிப்பு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டு ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.
- ❖ அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான 6 பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டன. இதில் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளையோர், சிறுவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.
- ❖ CC DRR தொடர்பான பயிற்சி நெறியானது அரச அதிகாரிகளுக்கு இரு மாவட்டங்களிலும் 2 நடாத்தப்பட்டது. இதில் 52 பேர் கலந்து கொண்டனர்.
- ❖ அனர்த்த தணிப்பு தொடர்பான 15 விழிப்புணர்வு பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## முரண்பாட்டின் நிலைமாற்றத்திற்காக இடம்பெற்றுவரும் பல்மட்டங்களிலான பங்காளிகளின்நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தல் (Consolidating Ongoing Multi-level Partnership Actions for Conflicts Transformation -COMPACT project)

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் முரண்பாட்டின் நிலைமாற்றத்திற்காக இடம்பெற்றுவரும் பல்மட்டங்களிலான பங்காளிகளின் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தல் செயற்திட்டம் எமது நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தின் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்திட்டத்தில் மாவட்ட சர்வமத சமாதானக் குழுக்களுடனான மாதாந்த கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

## தகவல் வளநிலையம் (Information Centre)

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை வழங்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், எமது பணியாளர்கள் ஆகியோர் எமது நூலகத்தில் நூல்களை பெற்று வாசிப்பதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

## விசேட செயற்பாடுகள் (Special Activities)

### Rapid assessment

மன்னார் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிடம் விபரங்கள் திரட்டப்பட்டு அனர்த்த பாதிப்பு தொடர்பான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு மன்னார் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

**சிறுதொழில் முயற்சிகள்**

எமது நிறுவனமானது பெண்களுக்கான தொழில்வாய்ப்பை வழங்கும் நோக்கில் யாழ்சக்தி கம்பனியை நடாத்தி வருகின்றது. இதன் முக்கிய உற்பத்தி பொருளாக தட்டை வடை உற்பத்தி செய்யப்படுகின்றது. இக்கம்பனியானது நீர்வேலிப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கம்பனியின் மூலமாக 10 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கம்பனியானது இலாபகரமாக செயற்பட்டு வருகின்றது.

**உதவித்திட்டங்களின் விபரங்கள்**

1. கோவிட் -19 காலப்பகுதியில் 15 வறிய குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.
2. அவுஸ்ரேலியா நாட்டை சேர்ந்த மைதிலி மகாலிங்கம் என்பவரின் உதவியுடன் 4 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 4500 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது.
3. Covid 19 காலப்பகுதியில் பிறந்த குழந்தைக்கான அத்தியாவசிய அவசரப்பொதி வழங்கப்பட்டது.
4. வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 140 போர்வைகள் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

**அபிவிருத்திக் குழு- Development Forum.**

மாவட்டத்தின் பல்வகை அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இக் குழுவில் பல்கலைகழகப் பேராசிரியர்கள் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகள் அங்கம் வகிப்பதுடன் தமது ஆலோசனைகள் வழிகாட்டல்கள்களை வழங்கி வருகின்றனர்.

**இளையோர் செயற்திட்டம்:**

சுமார் 500 இளையோர்கள் யாழ். மாவட்டத்தில் பல்வேறு சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் இவர்களுக்கான பயிற்சி வழிகாட்டல்களை எமது நிறுவனம் வழங்கி வருகிறது.

தொடர்புகள்:
ச.செந்துராசா
நிறைவேற்றுப் பணிப்பாளர்
**SOND**
18/10 வைமன் வீதி நல்லூர்.
E mail: senthu@eureka.lk
www.sond.lk